# பத்திரிக்கைச் செய்தி

அனைத்திந்திய பணிகள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் அரையாண்டு மற்றும் மொழித்தேர்வுகள் எதிர்வரும் நவம்பர் 2021 மாதத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி அரையாண்டு தேர்வுகள், அனைத்திந்திய பணிகளில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு மாநில பணிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு எதிர்வரும் 15.11.2021 (திங்கட்கிழமை) முதல் 19.11.2021 (வெள்ளிக்கிழமை) வரையும் மற்றும் குரல் தேர்வு 30.11.2021 (செவ்வாய் கிழமை) அன்றும் சென்னையில் மட்டுமே நடைபெறும்.

"Revenue Survey" & "Finance" தேர்வெழுத வரும் தேர்வர்கள் உதவி/துணை ஆட்சியருக்கான நில அளவை/ கருவூல பயிற்சி மேற்கொள்ளும் பயிற்சியாளர் என்பதற்கான சான்றிதழினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும்.

First Class Language Test Part-II தேர்வானது எழுத்துத் தேர்வு மற்றும் குரல் தேர்வு என இரண்டு கட்டங்களாக நடைபெறும். எழுத்துத் தேர்வு மற்றும் குரல் தேர்வானது 15.11.2021 மற்றும் 30.11.2021 ஆகிய நாட்களில் நடைபெறும்.

**இத்தேர்வுகளுக்கு தேர்வர்கள் இணைய வழியில் (www.tnpsc.gov.in/www.tnpscexams.net) One Time Registration மூலம் எதிர்வரும் 29.10.2021 (வெள்ளிக்கிழமை) மாலை 5.45 மணி வரை மட்டுமே விண்ணப்பிக்க இயலும் என்றும், தேர்வு கட்டணமாக பிரதி தேர்வு / மொழிக்கு ரூ.5/- எனவும், தட்டச்சு செய்யப்பட்ட/ எழுத்துப்பூர்வமாக அனுப்பப்பட்ட/ நகலெடுக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்றும், மேற்படி தேர்வுகள் தற்பொழுது பணியில் இருப்போரால் மட்டுமே எழுத இயலும் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

ஒம்/- வி.ஜெயசந்திர பானுரெட்டி
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

//உண்மைநகல்//

மாவட்ட ஆட்சியருக்காக
கிருஷ்ணகிரி.